# தற்காலத்தமிழில் ஐந்தாம் வேற்றுமை

**முனைவர் கி.சங்கர நாராயணன்**
உதவிப் பேராசிரியர்
தமிழ் மேம்பாட்டுச் சங்கப்பலகைத் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை

**மலர்:** 3

**இதழ்:** 2

**தொகுதி:** II

**மாதம்:** அக்டோபர்

**வருடம்:** 2018

**ISSN:** 2454-3993

தற்காலத்தமிழில் இடம்பெற்றுள்ள ஐந்தாம் வேற்றுமையினை ஆய்வதாக இக்கட்டுரை அமைகின்றது. தொல்காப்பியம் (நூ.77-78), முதலாக அனைத்து வேற்றுமை உருபுகளும் இன்னினை ஐந்தாம்வேற்றுமை உருபாகக் குறிப்பிடுகின்றது. இப்பொருளின் இத்தன்மைத்து இப்பொருள் என்ற பொருளில் அமைந்து வருவது இவ்வேற்றுமை என்கிறது தொல்காப்பியம். வண்ணம், வடிவு, அளவு, சுவை, தண்மை, வெம்மை, அச்சம், நன்மை, தீமை, சிறுமை, பெருமை, வன்மை, மென்மை, கடுமை, முதுமை, இளமை, சிறத்தல், இழித்தல், புதுமை, பழமை, ஆக்கம், இன்மை, உடைமை, நாற்றம், தீர்தல், பன்மை, சின்மை, பற்றுவிடுதல் போன்றன இவ்வேற்றுமையின் பயனிலைகள் ஆகும் என்கிறார் தொல்காப்பியர்.

வீரசோழியம் (நூ.3), ஐந்தாம் வேற்றுமை உருபாக இன் என்பதையும், அவை அவதி, அசலம், சலம் என்ற பொருளில் அமையும் என்றும் விளக்குகின்றது. நேமிநாதம் (நூ.43), தொல்காப்பியத்தைப் பின்பற்றி இலக்கணம் அமைகின்றது. உவமம், நீக்கம், எல்லை, ஏது என்ற பொருளில் வரப்பெறும் என்கிறது.

நன்னூல் (நூ.299), இலக்கணவிளக்கம் (நூ.202), தொன்னூல் விளக்கம் (நூ.60), இல், இன் என்பதை ஐந்தாம் வேற்றுமை உருபாகக் குறிப்பிடுகின்றன. இவ்வேற்றுமை நீங்கல், ஒப்பு, எல்லை, ஏது என்ற பொருளில் வரப்பெறும் எனவும் குறிப்பிடுகின்றன. இலக்கணவிளக்கம் ஐந்தாம் வேற்றுமை இதனின்இற்று இது என்னும் தன்மையில் வரப்பெறும் என்கிறது. முத்துவீரியம் (518-519), இல், இன் என்பதைக் குறிப்பிடுவதோடு, அச்சம், ஆக்கம், தீர்தல், பற்றுவிடல், நீங்கல், ஒப்பு, எல்லை, ஏது என்ற பொருளிலும் வரப்பெறும் என்கிறது.

சுவாமிநாதம் (நூ.43), இல், இன் என்பதை ஐந்தாம் வேற்றுமை உருபாகக் கொள்கின்றது. இவை ஏது, எல்லை, நீக்கம், உவமை ஆகியப்பொருளில் வந்து பெயரையும் வினையையும் கொண்டு முடியும் என்கிறது. தமிழ்நூல் (77), இல், இன் என்பதைக் குறிப்பிட்டு, நீங்கற் பொருளைத் தரும்பொழுதில் இன்னோடு நின்று என்பதும், இல்லொடு இருந்து என்பதும் இணைந்து நிற்கும் என்கிறது.

தென்னூல் (நூ.58), ஐந்தாம் வேற்றுமை உருபாக இன்னினைச் சுட்டுகின்றது. மேலும், இவை ஒன்றையொன்று ஒப்பிட்டும், உறழ்ந்தும், நீக்கியும், எல்லையும் அளவையுமாக இப்பொருளின் இப்பொருள் இந்நிலையினது என்னும் பொருள்படவரப்பெறும் என்கிறது. நின்று, இருந்து, உம், விட, காட்டினும் என்பதை ஐந்தாம் வேற்றுமையின் சொல்லுருபுகளாகக் குறிப்பிடுகின்றது.

தமிழ்நூல் (E.118-120), இன் என்பதைச் சுட்டுகின்றது. இவ்வுருபு இதனைவிட இது இத்தன்மையது என்னும் பொருளில் வரும் எனவும், இன் உருபு உம் என்னும் இடைச்சொல்லை ஏற்றுவருமானால் ஒப்பீட்டுப் பொருளைச் சிறப்பாகப் புலப்படுத்தும் என்றும் குறிப்பிடுகின்றது. வண்ணம், வடிவம், அளவு, சுவை, தன்மை ஆகியவற்றைக் கொண்டு இதனின்இது இத்தன்மையத்து என்று ஒப்புமைக்காட்டலும், நீங்கல், எல்லை இவற்றின் அகற்சியை இதனின் இது இத்தன்மையத்து என்று காட்டலும் இவை போன்ற பிறவும் ஐந்தாம் வேற்றுமையது பாகுபாட்டில் வரும் எனவும் குறிப்பிடுகின்றது.

பழங்கன்னடத்தில் இன் என்பது ஐந்தாம் வேற்றுமை உருபாகக் கொள்ளப்படுகிறது. ''இன்னென்னும் பெயரையுடைய வேற்றுமைக் கிளவி இப்பொருளின் இத்தன்மைத்து இப்பொருள் என்பதைப் பயப்ப வரும்'' என்கிறார் சேனாவரையர். ''ஐந்தாம் வேற்றுமை உருபு நான்கு பொருட்களை உடையது பொருஉபொருள், நீக்கம், எல்லை, ஏது'' என்கிறார் இளம்பூரணர். ''ஐந்தாம் வேற்றுமை என்பது 'இன்' எனப்பெயர் கொடுத்துக் கூறப்பட்ட வேற்றுமைச்சொல் என்றும், வண்ணம் முதலாகப் பற்றுவிடுதல் ஈறாக ஓதப்பட்டனவும், அத்தன்மை பிறவும் ஐந்தாம் வேற்றுமை பாகுபாடுகள்'' என்று கூறுகிறார் தெய்வச்சிலையார்.

''ஐந்தாம் வேற்றுமையின் வகைகளாகப் பொரு, எல்லை, நீக்கம், ஏது என்ற நான்கினைக்'' குறிப்பிடுகிறார் நச்சினார்க்கினியர். ''ஐந்தாம் வேற்றுமைக்கு இன்னென்பதும், இல்லென்பதும் உருபாம். நீங்கிநிற்றலும், உவமையும், எல்லையும், கருவியும்'' இதன் பொருளாகும் என்கிறார் மயிலைநாதர். ''நீக்கப் பொருளிலும், எல்லைப் பொருளிலும், இன், இல் உருபுகளின் மேல் நின்று, இருந்து என்பவை சில இடத்தும் சொல்லுருபுகளாக வரும்'' என்கிறார் சடகோபராமாநுஜாச்சாரியார். ''நீங்கல் வேற்றுமையை மட்டும் உணர்த்தும் தனியுருபு தமிழில் இல்லை என்றும், அதனைத் தனியொரு வேற்றுமையாக வேண்டல் தேவையற்றது என்றும், அது இடவேற்றுமையோடு சேர்ந்த ஒன்றாக வேண்டத் தக்கதொன்று'' என்று கூறுகிறார் கால்டுவெல் (Comparative Grammar of the Dravidiyan Languages, பக்.285-286).

''தொழில் நடக்கும் முன் எங்கேயிருந்தான் என்பதை வேற்றுமை காட்டும். இந்நிலையில் இதனை இடவேற்றுமையில் அடக்கி விடலாம் என்பதால், இதனைத் தனியொரு வேற்றுமையாகக் கருதவில்லை'' என்கிறார் ச.அகத்தியலிங்கம் (மொழியியல் சொல்லியல் - பெயரியல், ப.130)

''சங்க இலக்கியத்தில் இன் வேற்றுமை உருபு ஒப்பு, நீங்கல், எல்லை, ஏது என்னும் நான்கு பொருள்களில் வழங்குகின்றது'' என்கிறார் ப.வேல்முருகன் (எழுத்திலக்கண மாற்றம்,ப.65).

''நீங்கல் வேற்றுமையை மட்டுமே உணர்த்தும் தனியுருபு தமிழில் இல்லையென்றும் அதனைத் தனியொரு வேற்றுமையாக வேண்டல் தேவையற்றது என்றும் அது இட வேற்றுமையோடு சேர்த்து ஒன்றாக வேண்டத்தக்கதொன்று'' எனச் சுட்டுவர் கால்டுவெல் (Comparative Grammar of the Dravidiyan Languages பக்.285-286) என்று உரையாசிரியர்களும் மொழியியலாளர்களும் ஐந்தாம் வேற்றமையினைக் குறித்து விளக்குகின்றனர். தினத்தந்தி, தினமலர், தினமணி ஆகிய மூன்று இதழ்கள் இங்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

**இல்**

அயோத்தி**யில்** சர்ச்சைக்குரிய நிலம் பிரிக்கப்படவேண்டும்
நக்சலைட்டுகள் நடத்திய தாக்குத**லில்** வீரர்கள் 75 பேர் பலியாயினர் (தினத்தந்தி)
தமிழகத்**தில்** அமைதியும் ஒற்றுமையும் தழைக்கிறது
பாரதியார் நூற்றாண்டு விழா எட்டயபுரத்**தில்** நடைபெற்றது (தினமலர்)
மாவட்டத்தின் மிகப்பெரிய பூ சந்தை தோவாளை**யில்** அமைந்துள்ளது
காமன்வெல்த்விளையாட்டு ஏற்பாடுக**ளில்** மிகப்பெரியஊழல் நடந்துள்ளது (தினமணி)

**இன்**

பொன்சேகா**வின்** எம்.பி. பதவி பறிக்கப்பட்டது
சவுந்தர்ராஜ**னின்** மகன்கள் காப்பகப் பணிகளிலேயே ஈடுபட்டு வந்துள்ளனர் (தினத்தந்தி)
இந்தியா**வின்** ஒரே பவளத்தீவான லட்சத்தீவில் மக்கள் வசிக்கின்றனர்
சித்த மருத்துவத்தில் தாவரங்க**ளின்** பங்கு குறிப்பிடத்தக்கது (தினமலர்)

கிராமங்க**ளின்** ஊரக விளையாட்டுப் போட்டிகள் நேற்று நடைபெற்றது
பெரியகுளத்**தின்** அருகே எழுத்திட்டான் பாறை உள்ளது (தினமணி)

**இருந்து**

வெளிநாடுகளி**லிருந்து** சர்க்கரை இறக்குமதிச் செய்யப்பட்டுள்ளது
விடுதலைச் சிறுத்தைகளை கூட்டணியி**லிருந்து** வெளியேற்றவேண்டும் (தினத்தந்தி)
குடோனி**லிருந்து** கரும்புகை வெளியேறியது
மீனவர்கள் கடலி**லிருந்து** ஒரு வாரத்திற்கு மேல் மீன்பிடிப்பது வழக்கம் (தினமலர்)
மென்பொருளை வெளியி**லிருந்து** எந்த முறையிலும் இயக்கமுடியாது
நவம்பர் 19 ம்தேதி சென்னையி**லிருந்து** பாதயாத்திரை துவங்குகிறது (தினமணி)

தொல்காப்பிய காலம் முதல் நன்னூல் காலம் வரை ஐந்தாம் வேற்றுமை உருபாக இல், இன் அமைந்த நிலையினையும், தொன்னூலே முதன்முதலாக இருந்து, நின்று, விட, காட்டிலும் என்ற சொல்லுருபுகளை உணர்த்திய நிலையினையும் அறிந்து கொள்ள முடிகிறது. தற்காலத்தமிழில் குறிப்பாகப் பத்திரிக்கையில் இவ் ஐந்தாம் வேற்றுமையினைப் பொருத்திக் காணும் போது இலக்கணிகள் குறிப்பட்ட ‘இன்’, ‘இல்’ என்ற இரண்ட வேற்றுமைகளின் பயன்பாடுகள் தற்காலத்தமிழில் அதிகமாக ஆதிக்கம் செலுத்தினாலும் அதற்கு ஈடாக ‘இருந்து’ என்ற சொல்லுருபின் ஆதிக்கமும் காணத்தான் செய்கிறது. இருப்பினும் ‘நின்று’, ‘விட’, ‘காட்டிலும்’ என்ற சொல்லுருபுகளின் பயன்பாடும் பத்திரிக்கைத்தமிழில் மிகவும் அருகியும், இல்லாமலும் போய்விடுகின்றது. இதற்கான காரணத்தை எண்ணியோமானால் இல், இன், இருந்து என்ற உருபுகளின் பயன்பாட்டினால் சொல்லும் செய்தியினை எளிதாக, விரைவாக மனதில் புரியவைக்க வேண்டும் என்ற அடிப்படையினாலே இத்தகைய உருபுகளின் ஆதிக்கம் அதிகமாகவும், மற்ற உருபுகளின் ஆதிக்கம் குறைவாகவும் காணக்கிடக்கின்றது என்பதையும் பத்திரிக்கை மட்டுமல்லாமல், நாவல், சிறுகதை, கவிதை, விளம்பரத் தமிழ் போன்ற தற்கால இலக்கியத்துடனும் பொருத்திப் பார்த்து அவற்றில் இவ்ஐந்தாம் வேற்றமை அடைந்துள்ள மாற்றங்களையும் வளர்ச்சிகளையும் கண்டறிவது இந்த ஆய்வின் அடுத்தகட்ட நகர்விற்கு பேருதவியாக அமையும்.

**பயன்பட்ட நூல்கள்**


1. மரபிலக்கண நூற்களும் உரைகளும்
2. அழகேசன்.சு., 1991 இலக்கணப் பாதையில், சோபிதம் பதிப்பகம், நாகர்கோவில்.
3. அழகேசன்.சு., 1996 இலக்கணச்சுவை, சுதாபதிப்பகம், தூத்துக்குடி.
4. அழகேசன்.சு., 2004 தற்காலத் தமிழல் பிறமொழி ஆளுமைகளும் இலக்கண மீறல்களும், ஞாலத்தமிழ் ஆய்வு மன்றம், மதுரை.
5. சண்முகம் செ.வை., 1984 சொல்லிலக்கணக் கோட்பாடு, தொல்காப்பியம் - முதல்பகுதி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
6. ரேணுகாதேவி.வீ., 2005 இலக்கண ஆய்வுகள், பிரியா பதிப்பகம், திருச்சிராப்பள்ளி.